**செய்தி வெளியீடு எண்: 363** **நாள்:17.06.2011**

**<u>மாண்புமிகு கைத்தறி (ம) துணிநூல் துறை அமைச்சர் அலுவலகம்</u>**

## <u>பத்திரிகைச் செய்தி</u>

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் ஆணையின்படி 17.06.2011 அன்று சென்னை குறளகத்தில் கைத்தறி (மற்றும்) துணிநூல் அமைச்சர் மாண்புமிகு திரு பி.வி.ரமணா அவர்கள் தலைமையில், துணை இயக்குநர், உதவி இயக்குநர் மற்றும் உதவி அமலாக்க அலுவலர்களின் பணித்திறனாய்வுக் கூட்டம் நடைபெற்றது. ஆய்வின் போது கைத்தறி, கைத்திறன், துணிநூல் மற்றும் கதர் துறையின் செயலர் திரு சி.முத்துகுமாரசாமி இ.ஆ.ப. மற்றும் கைத்தறி மற்றும் துணிநூல் இயக்குநரகத்தில் பணிபுரியும் உயர் அலுவலர்களும் உடனிருந்தனர்.

**மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா** அவர்கள் தமிழக முதலமைச்சராகப் பதவியேற்றவுடன், தமிழ் நாட்டில் புதிதாக பதவியேற்றுள்ள தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசு, தமிழக மக்களின் அரசு, தமிழக நெசவாளர்களின் அரசு என்று அறிவுறுத்தியுள்ளார்கள். அதனுடைய நோக்கம் நெசவுத் தொழிலின் கடைசியிலுள்ள நெசவு கூலித் தொழில் செய்யும் தொழிலாளர்களும், நெசவுத் தொழிலை தங்களுடைய குடும்பத் தொழிலாக செய்துவரும் நெசவாளர்களும், நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள், நெசவாளர் குடும்பங்கள் ஆகியோரை பலப்படுத்த வேண்டும், உறுப்பினர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்படாமலும், கடந்த 5 ஆண்டுகளாக மேற்கண்ட சூழ்நிலை இல்லாததை மாற்றி தமிழக முதலமைச்சர் ஜெ.ஜெயலலிதா அவர்களின் தலைமையிலான அரசின் மூலமாக மேற்படி உள்ள நெசவு சமுதாயம் வளம் பெறுகின்ற வகையில் துறையில் பணிபுரியும் துணை இயக்குநர்கள், உதவி இயக்குநர்கள் மற்றும் உதவி அமலாக்க

அதிகாரிகள் பணிபுரிய வேண்டும். இதில் எந்தவித தொய்வில்லாமலும் செயல்படுவதை அதிகாரிகள் அனைவரும் உறுதி செய்யவேண்டும்.

இலவச வேட்டி சேலை வழங்கும் திட்டத்தினை சீரிய முறையில் செயல்படுத்தும் வகையில், 2011–2012 ஆம் ஆண்டில் வேட்டி சேலைகளை குறிப்பிட்டக் காலக்கெடுவுக்குள் உற்பத்தி செய்து வழங்கவும், உற்பத்தியைத் துவங்க ஏதுவாக கைத்தறி மற்றும் விசைத்தறி கூட்டுறவுச் சங்கங்களில் இத்திட்ட உற்பத்தியில் ஈடுபடும் தறிகளைக் கண்டறிந்து சேலைகள் மற்றும் வேட்டிகள் உற்பத்தி செய்ய நடவடிக்கை மேற்கொள்ளவும், இதற்கான பூர்வாங்கப் பணிகளில் ஈடுபடுமாறும் சரக துணை / உதவி இயக்குநர்களும் அறிவுறுத்தப்பட்டனர். டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவு திட்டத்தின் கீழ் பயன்பெறும் பள்ளி மாணவ, மாணவியர்களுக்கு இலவச சீருடை வழங்கும் திட்டத்தின் 105.93 இலட்சம் மீட்டர் சீருடைத் துணிகளை எவ்வித தொய்வுமின்றி உரிய காலத்தில் உற்பத்தி செய்ய அறிவுத்தப்பட்டுள்ள உற்பத்தித்திட்டத்தின் அடிப்படையில் துரிதமாக உற்பத்தி மேற்கொள்ள உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறும் சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை / உதவி இயக்குநர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

மேலும், தேர்தல் அறிக்கையில் அறிவிக்கப்பட்டதற்கிணங்க, வேட்டி சேலைகள் உற்பத்தியை மேற்கொள்ள ஏதுவாக கூடுதல் தறிகளை இலவச வேட்டி சேலை உற்பத்திக்கு இடையூறு ஏற்படாவண்ணம் கண்டறிந்து தயார் நிலையில் இருக்கவும் சரக கைத்தறி மற்றும் துணிநூல் துணை / உதவி இயக்குநர்கள் அறிவுறுத்தப்பட்டனர்.

**வெளியீடு: –**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, தலைமைச் செயலகம், சென்னை.**